மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களுக்கு சொன்ன அதே பதில்தான். சென்னை உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளரிடமிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும் அடிப்படையில், அங்கே நீதிமன்றம் அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

64—

சத்துணவுக் கூடம்

***1509**—**திரு. சு. ரவி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, சயினாபுரம் ஊராட்சி, புதுக்கண்டிகை கிராமத்திற்கு சத்துணவுக்கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம், சமூக நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தங்கத் தாரகை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என்னுடைய பதிலை அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

(அ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, சயினாபுரம் ஊராட்சி, புதுக்கண்டிகை கிராமத்திற்கு ரூபாய் 2 இலட்சம் மதிப்பில் புதிய சத்துணவுக்கூடம் கட்ட மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) மூன்று மாதத்திற்குள் கட்டி முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த புதுக்கண்டிகை கிராமத்திற்கு உடனடியாக சத்துணவுக்கூடம் அமைப்பதற்கு உத்தரவு பிறப்பித்தார். 100 நாட்களில் நூறாண்டு சாதனைகளைப் புரிந்தவரும், கேட்காமலேயே கொடுக்கும் "அட்சய பாத்திரமாக" விளங்கிவரும், தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்தக் கிராமத்து மக்களின் சார்பாக என்னுடைய கோடானுகோடி நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

65—

ஜவுளி சந்தை

***1366—திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், தெக்கலூர் ஊராட்சியில் ஜவுளி சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?